IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.160/2022

Deposition of Witness for P.W.20

| | | |
|---|---|---|
| NAME | - | **திரு.S.கோவிந்தசாமி** |
| OCCUPATION | - | **காவல் துணை கண்காணிப்பாளர், செய்யார், திருவண்ணாமலை** |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.02.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

<u>முதல் விசாரணை-</u>

நான் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாரில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 11.06.2020 லத்தேரி வட்டக் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது பனமடங்கி காவல் நிலைய குற்ற எண்.252/2020 இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 307, 302 என சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ஜெயசங்கர் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வைத்திருந்ததை என் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். 11.06.2020 தேதி காலை 06.00 மணிக்கு சம்பவயிடமான L.N புரம், கீழ்முட்டுகூர் கிராமம் சின்னம்மாள் வீட்டின் எதிரே அமைந்துள்ள சம்பவயிடத்தை சாட்சிகள் ஏழுமலை, தண்டபாணி ஆகியோர் முன்னிலையில் சம்பவத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். பார்வை மகசர் அ.த.சா.ஆ.36. மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ.37. அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 06.30

மணிக்கு சம்பவயிடத்திலுள்ள இரத்தம் தோய்ந்த மண் சிறிதளவு மற்றும் இரத்தம் தோயாத மண் சிறிதளவு இரத்தக் கறை படிந்த உடைந்த மண் தொட்டி ஓடுகள் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.38. இரத்தம் தோய்ந்த மண் சிறிதளவு சா.பொ.16 மற்றும் இரத்தம் தோயாத மண் சிறிதளவு சா.பொ.17 இரத்தக் கறை படிந்த உடைந்த மண் தொட்டி ஓடுகள் சா.பொ.18. இவ்வழக்கில் இறந்துபோன கிருஷ்ணன், 11.06.2020 தேதி காலை 08.00 மணிக்கு வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இவ்வழக்கில் இறந்துபோன கிருஷ்ணன் த/பெ. ராஜீ என்பவரது பிரேதத்தின் மீதான பிரேத விசாரணை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சவக்கிடங்கிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ-39. பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு ஆஜர் செய்த தலைமைக் காவலர் 1972 தட்சிணாமூர்த்தி என்பவரை அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே சாட்சிகள் சின்னம்மாள், சத்தியன், கோவிந்தம்மாள், செல்வராஜ், முருகன், ராஜா, தனபால், குமாரவேல், ஏழுமலை, தண்டபாணி, பலராமன், குமரன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.06.2020 தேதி இவ்வழக்கில் கண்ட எதிரிகளை தேடி கீழ்முட்டுகூர் கிராமத்தில் அருகில் உள்ள L.N புரம், கூட்டுரோடில் கண்காணித்தபோது அங்கு நின்று இருந்தவர்களை பெயர் விலாசம் விசாரித்தபோது அவர்கள் முருகன் த/பெ.தாமோதரன், காந்தி த/பெ.தாமோதரன், பாஸ்கரன் த/பெ.தாமோதரன், தாமோதரன் த/பெ.ராஜீ அனைவரும் இவ்வழக்கு எதிரிகள் என தீர்மானித்து காரணம் கூறி சாட்சிகள் குமரன் மற்றும் பலராமன்

முன்னிலையில் 14.30 மணிக்கு கைது செய்து விசாரிக்க எதிரிகள் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரி முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.40. எதிரி காந்தி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.41. எதிரி பாஸ்கரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.42. எதிரி தாமோதரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.43. எதிரி முருகுன் ஒப்புதல் வாக்குமூல தகவலின் அடிப்படையில் அவர் ஆஜர் செய்த TN-23-CK-0281 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Platina இருசக்கர வாகனத்தை சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன. எதிரி காந்தி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரிடமிருந்து TN-23-BD-2621 என்ற பதிவு கொண்ட Hero Splender Pro என்ற இருசக்கர வாகனத்தை சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். எதிரி பாஸ்கரன் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரிடமிருந்து TN-23-BA-3040 என்ற பதிவு கொண்ட Skoda Car என்ற வாகனத்தை சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூல தகவின் அடிப்படையில் எதிரிகள் சாட்சிகள் மற்றும் எங்களை கீழ்முட்டுகூர் கிராமத்திற்கு மாலை 17.00 மணிக்கு எதிரி முருகன் வீட்டிற்கு கூட்டிச் சென்று அவருடைய வீட்டிடம் இருந்து சுமார் 2 செ.மீ. தடிமன் கொண்ட சுமார் 5 செ.மீ. அகலமும் சுமார் 84 செ.மீ. நீளமும் கொண்ட ரீப்பர் மரக்கட்டை இரத்தக் கறை படிந்த ஒன்றையும், சுமார் 18 அங்குலம் நீளம் கொண்ட இரத்தக் கறை படிந்த மரக் கொம்பு ஒன்று, சுமார் 54.5 நீளமுள்ள

இரத்தக் கறை படிந்த முங்கில் கொம்பு ஒன்று ஆகியவற்றை சாட்சிகள் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்ததை மகசரில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். மாலை 17.15 மணிக்கு எதிரி காந்தி கீழ்முட்டுகூர் அவரின் வீட்டினிடமிருந்து சாட்சிகள் முன்னிலையில் ஆஜர் செய்த சுமார் 28 அங்குலம் நீளம் உள்ள இரத்தக் கறை படிந்த மரக் கொம்பு ஒன்று, சுமார் 38,5 அங்குலம் நீளம் உள்ள இரத்தக் கறை படிந்த மரக் கொம்பு ஒன்று ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். 17.30 மணிக்கு எதிரி பாஸ்கரன் வீட்டிடம் இருந்து எதிரி பாஸ்கர் எடுத்து ஆஜர் செய்த சுமார் 27 அங்குலம் நீளமுள்ள இரண்டாக உடைந்த நிலையில் இரத்தக் கறை படிந்த சிறிய உலக்கை கட்டை ஒன்று, அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். எதிரி தாமோதரன் 17.45 மணிக்கு L.N.புரம் கொல்லை மேட்டு அவருடைய வீட்டிற்கு எங்களை கூட்டிச் சென்று அதே சாட்சிகள் முன்னிலையில் சுமார் 18 அங்குலம் நீளமுள்ள இரத்தக் கறை படிந்த கொம்பு ஒன்று ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். மேற்சொன்ன நான்கு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 12.06.2020 தேதி காலை 11.00 மணிக்கு வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த காயம்பட்ட சின்னம்மாள் என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பெற்றேன். அப்போது சாட்சிகள் சத்தியன், சிவா முன்னிலையில் சின்னம்மாள் ஆஜர் செய்த இரத்தக் கறை படிந்த வெள்ளை நிற பூ போட்ட Brown நிற border வைத்த கிழிந்த இரண்டு துண்டான பச்சை நிற புடவை, இரத்தக் கறை படிந்த வெளீர்

பச்சை நிற கிழிந்த பாவாடை ஒன்று, இரத்தக் கறை படிந்த Blue நிற சிறு பூக்கள் போட்ட சந்தன நிற கிழிந்த ஜாக்கெட் ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.-44. 12.06.2020 காலை 08.00 மணிக்கு சடலக் கூறாய்விற்கு பொருப்பு ஏற்ற தலைமைக் காவலர் ஆஜர் செய்த இறந்த கிருஷ்ணனின் இரத்தக் கறை படிந்த வெள்ளை நிற Harish Tailor வடுகந்தாங்கல் என்ற Tailor mark கொண்ட கிழிந்த அரைகை சட்டை ஒன்று, இரத்தக் கறை படிந்த வெள்ளை நிற கிழிந்த முண்டா பனியன் ஒன்று, இரத்தக் கறை படிந்த சிமெண்ட் கலர் கிழிந்த Pant ஒன்று, GV - SEN என்ற Brown நிற ஜட்டி ஒன்று, கருப்பு நிற Belt துண்டுகள் மூன்று, கருப்பு நிற அரைஞாண் கயிறு ஒன்று மகசரில் கைப்பற்றினேன், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.45. காவலர் என்னிடம் தனி அறிக்கையை கொடுத்தார் அந்த தனி அறிக்கை அ.த.சா.ஆ.46. இரத்தக் கறை படிந்த வெள்ளை நிற Harish Tailor வடுகந்தாங்கல் என்ற Tailor mark கொண்ட கிழிந்த அரைகை சட்டை ஒன்று, இரத்தக் கறை படிந்த வெள்ளை நிற கிழிந்த முண்டா பனியன் ஒன்று, இரத்தக் கறை படிந்த சிமெண்ட் கலர் கிழிந்த Pant ஒன்று, GV - SEN என்ற Brown நிற ஜட்டி ஒன்று, கருப்பு நிற Belt துண்டுகள் மூன்று, கருப்பு நிற அரைஞாண் கயிறு ஒன்று அனைத்தும் சா.பொ.19 (வரிசை). 12.06.2020 சாட்சிகள் சத்தியன் மற்றும் சிவா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.06.2020 தேதி 14.00 மணிக்கு கீழ்முட்டுகூர் கிராமம் L.Nபுரம் கிராமத்திலுள்ள இறந்த கிருஷ்ணன் என்பவர் வீட்டிடம் இருந்து சாட்சி சத்தியன் கருப்பு நிற SKALIND என்ற 9 அங்குலம் கொண்ட இரத்தக் கறை

படிந்த செருப்பை மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.47. 11.01.2021 தேதி எதிரிகள் மோகன்ராஜ், சரண்ராஜ், நவீன்ராஜ் ஆகியோர்களை போலீஸ் காவலில் எடுத்து எதிரி மோகன் ராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை குமார் பலராமன் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி மோகன்ராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கீழ்முட்டுகூர் எதிரியின் தாத்தா தாமோதரன் என்பவரது வீட்டின் பின்புரத்திலிருந்து இருமுனையும் கூர்மையான சுமார் 118 செ.மீ. உயரம் கொண்ட இரும்பு கடப்பாறை ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். எதிரி மோகன் ராஜ் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.48. சாட்சிகள் ரேக்கா, கிருஷ்ணன், அண்ணாதுரை, சாமிநாதன், சூரியபிரகாஷ், மேகநாதன், லட்சுமி, உமாபதி, பாபு, சேட்டு, மகேந்திரன், குமார், தட்சிணாமூர்த்தி, கிருபாநந்தன், ஜெய்சங்கர், மருத்துவர் பாலகிருஷ்ணன், தடய அறிவியல் அலுவலர் சொக்கநாதன், சடலக் கூறாய்வு செய்த மருத்துவர் கலைச்செல்வியை ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புலன் விசாரணை முடித்து அரசு வழக்கறிஞரின் கருத்துரையைப் பெற்று சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கையை தாக்கல் செய்தேன். அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.49. புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(பி), 324,307, 302 ல் இருந்து 148, 149, 294(பி), 307, 302 இ.த.ச. பிரிவுகளாக பிரிவு மாற்றம் செய்து 01.03.2021 தேதி எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சி ஏழுமலை, தண்டபாணி, ரேக்கா, கிருஷ்ணன்,

அண்ணாதுரை, சாமிநாதன், சூரியபிரகாஷ், மேகநாதன் ஆகியோர் எனது விசாரணையில் சம்பவத்தைப் பற்றி கூறியுள்ளனர்.

<u>குறுக்கு விசாரணை</u>-எதிரிகள் ஆஜர், எதிரி தரப்பு வழகறிஞர்கள் ஆஜர் இல்லை. எதிரிகளுக்கு Legal Aid Defence Counsel நியமித்து குறுக்கு விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வினவப்பட்டபோது எதிரிகள் தேவையில்லை என மறுத்துவிட்டனர். எனவே குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் இல்லை என முடித்து வைக்கப்பட்டது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 26.02.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.27 11:19:08 +0600

Additional District Judge(FTC),
Vellore